**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 26/2022 |
| Name | : Thangaraj |
| P.W. | : 4 |
| Father Name | : Velusamy gounder |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **14.05.2026**

**எதிரிகள் 2 முதல் 7 நீதிமன்றத்தில் ஆஜர்**

**1ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSSன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் கொழுமத்தில் வசிக்கிறேன். மட்டை மில் வைத்துள்ளேன். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் ஞாபகம் இல்லை. இரவு 10 மணி அளவில் நான் வெளியே சென்றிருந்த போது எனது மில்லிற்கு வெளியே சண்டை நடைபெற்றதாக சொன்னார்கள். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிகளை நான் பார்த்ததில்லை. நான் போலீசார் விசாரணையில் கடந்த 13.11.2021ம் தேதி இரவு 10.00 மணிக்கு என்னிடம் பணிபுரியும் ஐயப்பன் என்பவரின் வீட்டிற்கு நான் சென்ற போத ஆஜர் எதிரிகள் அவர்களுடன் தகராறு செய்து

கொண்டிருந்ததை பார்த்து ஏன் என்று கேட்டதற்கு அவர்கள் என்னை கெட்ட வார்த்தையால் திட்டி, கல்லால் அடித்து, எனக்கு சொந்தமான TN 78 Q 0994 Bajaj CT 100 இருசக்கர வாகனத்தை மண் வெட்டியால் அடித்து நொறுக்கி என்னை கொலை மிரட்டல் விடுத்தது குறித்து போலீசார் விசாரணையில் நான் சாட்சியம் அளித்துவிட்டு தற்போது எதிரிகளை தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.05.14 16:14:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 26/2022 |
| Name | : Gnana Selvam |
| P.W. | : 5 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**14.05.2026**

**எதிரிகள் 2 முதல் 7 நீதிமன்றத்தில் ஆஜர்**

**1ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSSன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் சங்கரராமநல்லூர் தெற்கில் வசிக்கிறேன். விவசாயம் செய்து வருகிறேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு மில்லிற்கு சென்ற போது அதற்கு முன் தினம் சண்டை நடைபெற்றதாக சொன்னார்கள். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிகளை நான் பார்த்ததில்லை. நான் போலீசார் விசாரணையில் கடந்த 13.11.2021ம் தேதி இரவு 10.00 மணிக்கு தங்கராஜிடம் பணிபுரியும் ஐயப்பன் என்பவரின் வீட்டிற்கு நானும், தங்கராஜும் சென்ற போது ஆஜர் எதிரிகள் அவர்களுடன் தகராறு செய்து கொண்டிருந்ததை பார்த்து ஏன் என்று தங்கராஜ் கேட்டதற்கு அவர்கள் அவரை கெட்ட வார்த்தையால் திட்டி, கல்லால் அடித்து, அவருக்கு சொந்தமான TN 78 Q 0994

Bajaj CT 100 இருசக்கர வாகனத்தை மண் வெட்டியால் அடித்து நொறுக்கி என்னையும் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தது குறித்து போலீசார் விசாரணையில் நான் சாட்சியம் அளித்துவிட்டு தற்போது எதிரிகளை தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.05.14 16:14:52 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்